தி/ள். ஐநாக்ஸ் விண்ட் லிமிடெட்.

/எதிர்/

தி/ள். தெர்மோகேபிள்ஸ் லிமிடெட்.

(உரிமையியல் மேல்முறையீடு எண் 19/2018)

2018 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 05 ஆம் நாள்

[மாண்புமிகு நீதியரசர் எஸ். ஏ. போப்டே மற்றும் மாண்புமிகு நீதியரசர் எல்.

நாகேஸ்வர ராவ்]

பொதுவர் தீர்வு மற்றும் இசைவுத் தீர்விணக்கச் சட்டம், 1996 – பிரிவு 11(6) - கேபிள்களை விநியோகம் செய்வதற்காக எதிர்மேல்முறையீட்டாளருக்கு மேல்முறையீட்டாளரால் கொள்முதல் ஆணைகள் வழங்கப்பட்டன - எதிர்மேல்முறையீட்டாளர் மேல்முறையீட்டாளருக்கு கேபிள்களை வழங்கினார் - கேபிள்களை பதிக்கும் போது, அவற்றின் வெளிப்புற உறைகளில் விரிசல் ஏற்பட்டிருப்பதை மேல்முறையீட்டாளர் கண்டறிந்தார் - மேல்முறையீட்டாளர் மாற்றீடுக்கு (replacement) கோரினார் - எதிர்மேல்முறையீட்டாளர் நிறுவனம் கேபிள்களை மாற்றவில்லை - நிலையான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் ஒரு தனி பொதுவரின் பெயரை முன்மொழிந்து மேல்முறையீட்டாளர் அறிவிப்பை வழங்கினார் - எந்தப் பதிலும் இல்லாத நிலையில், மேல்முறையீட்டாளர் சட்டத்தின் பிரிவு 11(6)-ன் கீழ்

உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார் - நிலையான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் பொதுவர் தீர்ப்புச் சட்டக்கூறுக்குத் தனியான குறிப்பு ஏதும் இல்லாத காரணத்தால், அந்த பொதுவர் தீர்ப்புச் சட்டக்கூறு கொள்முதல் ஆணையில் உள்ளடக்கப்படவில்லை எனக் கூறி, உயர் நீதிமன்றம் அந்த மனுவை தள்ளுபடி செய்தது - தீர்வு: கொள்முதல் ஆணையின்படி, விநியோகம் என்பது ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த நிலையான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி இருக்க வேண்டும் - நிலையான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில், பிற நிபந்தனைகளைத் தவிர, சர்ச்சைத் தீர்வு தொடர்பான ஒரு சட்டக்கூறும் இடம்பெற்றிருந்தது - பதிவில் உள்ள ஆதாரங்களின்படி, எதிர்மேல்முறையீட்டாளர் கொள்முதல் ஆணையில் குறிப்பிடப்பட்டிருந்த விநியோக காலத்தைத் தவிர, பிற அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டார் - கொள்முதல் ஆணை என்பது ஒரு ஒற்றை ஒப்பந்தமாகும் மற்றும் அது ஒரு வர்த்தக சங்கம் அல்லது ஒரு தொழில்முறை அமைப்பால் வழங்கப்படாவிட்டாலும் கூட, அந்த நிலையான வடிவத்தின் பொதுவான குறிப்பு பொதுவர் தீர்ப்புச் சட்டக்கூறை உள்ளடக்க போதுமானதாகும் - எனவே, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு நீக்கறவு

செய்யப்படுகிறது - தரப்பினர்களுக்கு இடையேயான சர்ச்சை குறித்து தீர்ப்பளிக்க பொதுவர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.

மேல்முறையீட்டை அனுமதித்து, இந்த நீதிமன்றம் தீர்ப்பளித்ததாவது -

1. ஒரு முந்தைய ஒப்பந்தத்தைக் குறித்த பொதுவான குறிப்பு, பிந்தைய ஒப்பந்தத்தில் பொதுவர் தீர்ப்புச் சட்டக்கூறை உள்ளடக்க போதுமானதாக இல்லாவிட்டாலும், நிலையான வடிவத்தின் பொதுவான குறிப்பு, பொதுவர் தீர்ப்புச் சட்டக்கூறை உள்ளடக்க போதுமானதாகும். எம்.ஆர். இன்ஜினியர்ஸ் வழக்கில், இந்த நீதிமன்றம் வர்த்தக சங்கங்கள் மற்றும் தொழில்முறை நிறுவனங்களின் ஒப்பந்தத்தின் நிலையான வடிவத்தின் விதிவிலக்குகளைக் கட்டுப்படுத்தியது. எம்.ஆர். இன்ஜினியர்ஸ் வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பிற்குப் பிறகு சட்டத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, பொதுவர் தீர்ப்புச் சட்டக்கூறை இணைப்பதற்கு ஒருமித்த நிலையான வடிவத்தைப் பற்றிய பொதுவான குறிப்பு போதுமானது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒரு தரப்பினரின் ஒப்பந்தத்தின் நிலையான வடிவத்தைப் பற்றிய பொதுவான குறிப்பு, பொதுவர் தீர்ப்புச் சட்டக்கூறை இணைக்க போதுமானதாக இருக்கும். எம்.ஆர். இன்ஜினியர்ஸ் வழக்கில் இந்த நீதிமன்றம் சார்வுற்ற முந்தைய பதிப்போடு சேர்த்துப் படித்து, ரஸ்ஸல் ஆன் ஆர்பிட்ரேஷன் 24 வது பதிப்பு (2015)-ன் பத்தியை ஆய்வு செய்வது,

ஒருங்கிணைப்பு தொடர்புடைய சட்டத்தின் நிலைப்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை நிரூபிக்கும். ஒரு தரப்பினரின் ஒப்பந்தத்தின் நிலையான வடிவம் தொடர்பான ஒரு பொதுவான குறிப்பு, வர்த்தக சங்கங்கள் மற்றும் தொழில்முறை அமைப்புகளின் ஒப்பந்தங்களுடன் இணைந்து பொதுவர் தீர்ப்புச் சட்டக்கூறை இணைப்பதற்கு போதுமானதாக இருக்கும் என்ற திருத்தத்துடன் இந்த நீதிமன்றம் எம்.ஆர். இன்ஜினியர்ஸ் வழக்கின் தீர்ப்புடன் உடன்படுகிறது. [பத்தி 19] [100-F- D H: 101- A]

2. தற்போதைய வழக்கில், மேல்முறையீட்டாளரால் கொள்முதல் ஆணை வழங்கப்பட்டது, அதில் விநியோகமானது அதில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின்படி மற்றும் இணைக்கப்பட்ட நிலையான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி வழங்கல் இருக்கும் என்று திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளது. விநியோக காலத்தைத் தவிர, கொள்முதல் ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதை எதிர்மேல்முறையீட்டாளர் தனது கடிதத்தின் மூலம் உறுதிப்படுத்தினார். பொருட்கள் விநியோகிக்கப்பட்ட பிறகு, சர்ச்சை எழுந்தது. சந்தேகத்திற்கு இடமின்றி, கொள்முதல் ஆணையுடன் இணைக்கப்பட்ட நிலையான வடிவம் ஒரு வர்த்தக சங்கம் அல்லது ஒரு தொழில்முறை அமைப்பைச் சேர்ந்தது என்று தரப்பினரால் செய்யப்பட்ட வேண்டுகோள்கள்

அல்லது சமர்ப்பிப்புகளிலிருந்து எதுவும் வெளிப்படவில்லை. இருப்பினும், கொள்முதல் ஆணையுடன் இணைக்கப்பட்ட நிலையான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து எதிர்மேல்முறையீட்டாளர் அறிந்திருந்தார். கொள்முதல் ஆணை என்பது ஒரு ஒற்றை ஒப்பந்தமாகும் மற்றும் அது ஒரு வர்த்தக சங்கம் அல்லது ஒரு தொழில்முறை அமைப்பால் வழங்கப்படாவிட்டாலும் கூட, அந்த நிலையான வடிவத்தின் பொதுவான குறிப்பு பொதுவர் தீர்ப்புச் சட்டக்கூறை உள்ளடக்க போதுமானதாகும். [பத்தி 20] [101- G B-D]

எம்.ஆர். இன்ஜினியர்ஸ் அண்ட் காண்ட்ராக்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் /எதிர்/ சோம் டாட் பில்டர்ஸ் லிமிடெட், (2009) 7 எஸ்.சி.சி. 696: [2009] 10 எஸ்.சி.ஆர். 373 – சார்வுறப்பட்டது.

கடல் வர்த்தக கடல்சார் நிறுவனம் /எதிர்/ ஹெலனிக் மியூச்சுவல் வார் ரிஸ்க்ஸ் அசோசியேஷன் (பெர்முடா) லிமிடெட், தி அதீனா [2006] EWHC 2530 (Comm); *ஹபாஸ் சினாய் வெ திப்பி கஸ்லர் இஸ்திசல் எண்டுஸ்ட்ரி ஏ.எஸ். /எதிர்/ சோமடல் சால்*, [2010] EWHC 29 (Comm): *ஆ:டன் /எதிர்/ எம்.எ:ப் கென்ட் சர்வீசஸ்*, [1991] 31 கான் எல்.ஆர். 60 - குறிப்பிடப்பட்டது.

ரஸ்ஸல் ஆன் ஆர்பிட் ரேஷன் 24 வது பதிப்பு (2015) - குறிப்பிடப்பட்டது.

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்

[2009] 10 எஸ்.சி.ஆர். 373	பத்தி 5	சார்வுறப்பட்டது
[2006] EWHC 2530 (Comm)	பத்தி 12	குறிப்பிடப்பட்டது
[2010] EWHC 29 (Comm)	பத்தி 13	குறிப்பிடப்பட்டது
[1991] 31 கான் எல்.ஆர். 60	பத்தி 15	குறிப்பிடப்பட்டது

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: உரிமையியல் மேல்முறையீடு எண் 19/2018.

CMAA எண் 2/2015-ல் அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் 20.07.2016 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து இந்த மேல்முறையீடு எழுகிறது.

மேல்முறையீட்டாளருக்காக - விபா தத்தா மகிஜா, மூத்த வழக்கறிஞர், அனுப் ஜெயின், புல்கிட் ஸ்ரீவஸ்தவா, திஷா வைஷ்.

எதிர்மேல்முறையீட்டாளருக்காக - கே.ராஜேந்திரன், ஏ.டி.எம்.சம்பத், எஸ்.கே.பந்தோபாத்யாய், சுரங்கமா பானர்ஜி, ராகுல் நாக்பால்.

இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு **மாண்புமிகு நீதியரசர் எல்.நாகேஸ்வர ராவ்,** அவர்களால் வழங்கப்பட்டது.

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. இந்த மேல்முறையீடு, பொதுவர் தீர்வு மற்றும் இசைவுத் தீர்விணக்கச் சட்டம், 1996, (இனிமேல் 'சட்டம்' என்று குறிப்பிடப்படும்), பிரிவு 11(6)-ன் கீழ் மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தை தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பட்ட அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது.

3. மேல்முறையீட்டாளர் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள் (WTGs) உற்பத்தி செய்பவராவார். எதிர்மேல்முறையீட்டாளர் காற்றாலை மின் கேபிள்கள் மற்றும் பிற வகை கேபிள்களை உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ளார். மேல்முறையீட்டாளர் தங்களது காற்றாலை விசையாழி ஜெனரேட்டர்களுக்கு (WTGs) கேபிள்கள் விநியோகப்பதற்காக, 13.12.2012 மற்றும் 02.02.2013 தேதியிட்ட இரண்டு கொள்முதல் ஆணைகள் எதிர்மேல்முறையீட்டாளருக்கு வழங்கினார். கொள்முதல் ஆணையின் படி, விநியோகம் என்பது ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட நிலையான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி இருக்க வேண்டும். மற்ற நிபந்தனைகள் தவிர, நிலையான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் சர்ச்சை தீர்வு தொடர்பான ஒரு சட்டக்கூறை கொண்டுள்ளன. 1996 ஆம் ஆண்டு பொதுவர் தீர்வு மற்றும் இசைவுத் தீர்விணக்கச் சட்டத்தின் வகையங்களின்படி ஒரு சர்ச்சையை ஒரு தனி பொதுவர் தீர்க்க மேற்கூறிய

சட்டக்கூறு வழிவகை செய்கிறது. 15.12.2012 தேதியிட்ட கடிதத்திலிருந்து தெளிவாகத் தெரிவது போல, விநியோக காலம் தவிர, கொள்முதல் ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் எதிர்மேல்முறையீட்டாளர் ஏற்றுக்கொண்டார் என்பதை பதிவில் உள்ள ஆவணம் சுட்டிக்காட்டுகிறது.

4. எதிர்மேல்முறையீட்டாளர், கொள்முதல் ஆணையின் படி, மேல்முறையீட்டாளருக்கு காற்றாலை மின் கேபிள்களை வழங்கினார். எதிர்மேல்முறையீட்டாளர் நிறுவனத்தால் வழங்கப்பட்ட கேபிள்களை பதிக்கும் போது, 150 சதுர மி.மீ கேபிள்களின் வெளிப்புற உறைகளில் விரிசல் ஏற்பட்டிருப்பதை மேல்முறையீட்டாளர் கண்டுபிடித்தார். இது விலையுயர்ந்த உபகரணங்களுக்கு சேதம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக, காற்றாலை மின் உற்பத்தி நிலையங்கள் (WTG) பணிகளை நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. மேல்முறையீட்டாளரின் கூற்றுப்படி, எதிர்மேல்முறையீட்டாளர் நிறுவனம் கேபிள்களை மாற்றி தரவில்லை. எனவே, நிலையான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் ஒரு தனி பொதுவரின் பெயரை முன்மொழியும் 30.10.2014 தேதியிட்ட அறிவிப்பை வெளியிட மேல்முறையீட்டாளர் கட்டாயப்படுத்தப்பட்டார். எந்தவொரு பதிலும் இல்லாத

காரணத்தால், மேல்முறையீட்டாளர் சட்டத்தின் பிரிவு 11(6)-ன் கீழ் ஒரு மனுவை அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் .

5. மேல்முறையீட்டாளர் பொதுவர் தீர்ப்புமுறை ஒப்பந்தம் இருப்பதை நிரூபிக்காததால் ஒரு பொதுவரை நியமிக்க முடியாது என்று கூறி உயர் நீதிமன்றம் மேற்படி மனுவை தள்ளுபடி செய்தது. **எம்.ஆர். இன்ஜினியர்ஸ் அண்ட் காண்ட்ராக்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் /எதிர்/ சோம் டாட் பில்டர்ஸ் லிமிடெட்**, (2009) 7 **எஸ்.சி.சி. 696** என்ற வழக்கில் இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பை உயர் நீதிமன்றம் சார்வுற்று, நிலையான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் பொதுவர் தீர்ப்புச் சட்டக்கூறு தொடர்பான சிறப்பு குறிப்பு எதுவும் இல்லை, எனவே பொதுவர் தீர்ப்புச் சட்டக்கூறு கொள்முதல் ஆணையில் இணைக்கப்பட்டதாகக் கூற முடியாது.

6. மேல்முறையீட்டாளர் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர் வழக்கறிஞர்களின் வாதங்களை நாங்கள் கேட்டோம். மேற்சொன்ன **எம்.ஆர். இன்ஜினியர்ஸ்** வழக்கு இரு தரப்பினர்களாலும் சார்வுறப்பட்டது. மேற்கொண்டு தொடர்வதற்கு முன், மேற்கண்ட தீர்ப்பின் அகவுரையை மதிப்பிடுவது அவசியமாகும். மேற்கண்ட வழக்கில் உள்ள சர்ச்சையைப் புரிந்து கொள்ள தேவையான சில பொருண்மைகள் என்னவென்றால், அதிலுள்ள மேல்முறையீட்டாளர் எதிர்மேல்முறையீட்டாளரின் துணை ஒப்பந்தக்காரராக இருந்தார். 'திட்ட

இயக்குநரகம் கட்டிடத்தை கட்டும் பணி' தொடர்பான பணியின் ஒரு பகுதியை எதிர்மேல்முறையீட்டாளரான ஒப்பந்தக்காரர் மேல்முறையீட்டாளரிடம் ஒப்படைத்தார். முதன்மை ஒப்பந்தத்திற்கு பொருந்தக்கூடிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி துணை ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும் என்று துணை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தரப்பினர்களுக்கிடையே ஒரு சர்ச்சை எழுந்தது, இது அதிலுள்ள மேல்முறையீட்டாளரை, பொதுவர் தீர்வு மற்றும் இசைவுத் தீர்வினைக்கச் சட்டம், 1996, பிரிவு 11(6)-ன் கீழ் ஒரு பொதுவரை நியமிக்க கோரி உயர் நீதிமன்றத்தை அணுகும்படி செய்தது. கேரள உயர் நீதிமன்றம், முதன்மை ஒப்பந்தத்தில் உள்ள பொதுவர் தீர்ப்புச் சட்டக்கூறு, அதிலுள்ள மேல்முறையீட்டாளருக்கும் எதிர்மேல்முறையீட்டாளருக்கும் இடையிலான ஒப்பந்தத்தில் குறிப்பு மூலம் இணைக்கப்படவில்லை என்ற அடிப்படையில் அந்த மனுவை நிராகரித்தது. இந்த நீதிமன்றத்தின் முன் உள்ள மேல்முறையீட்டில், மேல்முறையீட்டாளர், தனது வழக்கு சட்டத்தின் பிரிவு 7 (5)-ஆல் முழுமையாக உள்ளடக்கப்பட்டுள்ளது மற்றும் முதன்மை ஒப்பந்தத்திலிருந்து பொதுவர் தீர்ப்புச் சட்டக்கூறு அவருக்கும் எதிர்மேல்முறையீட்டாளருக்கும் இடையிலான துணை ஒப்பந்தத்தில் குறிப்பு மூலம் இணைக்கப்பட்டுள்ளது என்ற வாதத்தை முன்வைத்தார்.

7. இந்த நீதிமன்றம் சட்டத்தின் பிரிவு 7 (5)-ன் நோக்கத்தை கருத்தில் கொண்டு, மற்றொரு ஆவணத்தில் காணப்படும் பொதுவர் தீர்ப்புச் சட்டக்கூறை ஒப்பந்தத்தில் இணைக்கும் நோக்கத்திற்காக நனவான ஏற்றுக்கொள்ளல் அவசியம் என்று கூறியது. ஒரு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியை குறித்த குறிப்பை, அதில் உள்ள பொதுவர் தீர்ப்புச் சட்டக்கூறுடன் சேர்த்து முழுவதுமாக உள்ளடக்கிய குறிப்பு என்று கருதுவதற்கு முன்பு, பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகள் குறித்து பிரிவு 7 (5)-ல் எந்த வழிகாட்டுதல்களும் இல்லாததால், ஒப்பந்தங்களின் பொதுவான கட்டுமான விதிகள் பின்பற்றப்பட வேண்டும் என்று மேலும் கூறப்பட்டது. மற்றொரு ஆவணத்திற்கான 'குறிப்பை' அதில் 'இணைத்தல்' என்பதிலிருந்து வேறுபடுத்தும் அதே வேளையில், ஆவணத்தை முழுமையாக ஏற்றுக்கொள்வது அல்லது அந்த ஆவணத்தின் குறிப்பிட்ட பகுதிகளை கடன் வாங்குவது தரப்பினர்களின் நோக்கம் தொடர்புடைய காரணி என்று இந்த நீதிமன்றம் கவனித்தது. இது தொடர்பாக, நீதிமன்றம் பின்வருமாறு கூறியது: (**எம்.ஆர். இன்ஜினியர்ஸ்** வழக்கு, பத்தி 17-19)

> "17. இந்த நிலைப்பாட்டை விளக்குவதற்காக (விளக்கத்திற்காக மட்டுமே தவிர, முழுமையானது அல்ல) இணைத்தல் மற்றும் வெறும் குறிப்பு ஆகியவற்றுக்கான சில உதாரணங்களை நாங்கள் அளிப்போம். ஒரு ஒப்பந்தம் ஒரு ஆவணத்தைக் குறிப்பிட்டு, அந்த

ஆவணம் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகவும் ஒருங்கிணைந்த அங்கமாகவும் இருக்கும் அல்லது அந்த ஆவணத்தின் அனைத்து விதிமுறைகளும் நிபந்தனைகளும் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக படிக்கப்பட வேண்டும் அல்லது கருதப்பட வேண்டும், அல்லது ஒப்பந்தம் மேற்கூறிய ஆவணத்தின் விதிகளால் நிர்வகிக்கப்படும் அல்லது அந்த ஆவணத்தின் விதிமுறைகளும் நிபந்தனைகளும் ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படும் என்று வழங்கினால், அந்த ஆவணத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் முழுமையாக உயர்த்தப்பட்டு ஒப்பந்தத்தில் இணைக்கப்படும். ஒரு ஆவணத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை அவ்வாறு இணைக்கும்போது, அத்தகைய ஆவணத்தின் ஒவ்வொரு விதியும் (ஒப்பந்தத்தில் எந்தவொரு குறிப்பிட்ட வகையத்திற்கும் முரணாக இருக்கும் அளவைத் தவிர) ஒப்பந்தத்திற்கு பொருந்தும். அவ்வாறு இணைக்கப்பட்ட ஆவணத்தில் பொதுவர் தீர்ப்புமுறை மூலம் தகராறுகளைத் தீர்ப்பதற்கான வகையம் இருந்தால், மேற்கூறிய பொதுவர் தீர்ப்புச் சட்டக்கூறு ஒப்பந்தத்திற்கும் பொருந்தும்.

18. மறுபுறம், ஒரு குறிப்பிட்ட சூழலில் ஒரு ஒப்பந்தத்தில் ஒரு ஆவணத்திற்கான குறிப்பு மட்டுமே இருந்தால், ஆவணம்

ஒப்பந்தத்தில் முழுமையாக இணைக்கப்படாது. எடுத்துக்காட்டாக, விநியோகம் தொடர்பான விவரக்குறிப்புகள் முந்தைய ஒப்பந்தத்திலோ அல்லது மற்றொரு கொள்முதல் ஆணையிலோ வழங்கப்பட்டுள்ளபடி இருக்கும் என்று ஒரு ஒப்பந்தம் வழங்கினால், விநியோகிக்கப்பட வேண்டிய பொருட்களின் விவரக்குறிப்புகளை உறுதிப்படுத்துவதற்கான வரையறுக்கப்பட்ட நோக்கத்திற்காக மட்டுமே அந்த ஆவணத்தைப் பார்க்க வேண்டியது அவசியம். குறிப்பிடப்பட்ட ஆவணத்தை விலை அல்லது விலை செலுத்துதல் போன்ற வேறு எந்த நோக்கத்திற்காகவும் பார்க்க முடியாது. இதேபோல், X மற்றும் Y க்கு இடையிலான ஒப்பந்தம், X மற்றும் Z க்கு இடையிலான ஒப்பந்தத்தில் உள்ளதைப் போலவே, Y க்கு பணம் செலுத்தும் விதிமுறைகள் இருக்கும் என்று வழங்கினால், X மற்றும் Z இடையேயான ஒப்பந்தத்திலிருந்து பணம் செலுத்தும் விதிமுறைகள் மட்டுமே, X மற்றும் Y இடையேயான ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக படிக்கப்படும். அளவு அல்லது விநியோகம் தொடர்பான பிற விதிகளைப் பார்க்க முடியாது.

19. பிரிவு 7 உட்பிரிவு (5) ஒப்பந்தங்களை நிர்மாணிப்பதற்கான நன்கு நிறுவப்பட்ட கொள்கைகளை வெறுமனே மீண்டும் வலியுறுத்துகிறது.

ஒரு ஒப்பந்தத்தில் ஒரு ஆவணத்திற்கான குறிப்பு இருந்தால், மற்றும் அந்த ஆவணம் முழுவதுமாக இணைக்கப்படவில்லை என்று அந்தக் குறிப்பு காட்டினால், அது பொருந்தும் வகையில் பொதுவர் தீர்ப்பு சட்டக்கூறுக்கு ஒரு சிறப்பு குறிப்பு இருந்தால் தவிர, அந்த குறிப்பு, அந்த ஆவணத்தில் உள்ள பொதுவர் தீர்ப்பு சட்டக்கூறானது ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக ஆகாது."

8. பொதுவர் தீர்வு மற்றும் இசைவுத் தீர்வினைக்கச் சட்டம், 1996, பிரிவு 7 (5)-ன் விளக்கத்திற்காக இந்த நீதிமன்றத்தால் சார்வுறப்பட்ட ரஸ்ஸல் ஆன் ஆர்பிட்ரேஷன், 23 வது பதிப்பு (2007) என்ற புத்தகத்திலிருந்து தொடர்புடைய பத்திகள் பின்வருமாறு: (**எம்.ஆர். இன்ஜினியர்ஸ்** வழக்கு, பத்தி 20-21)

"20. பொதுவர் தீர்ப்புமுறைச் சட்டம், 1996 பிரிவு 6 (2)-க்கு இணையான இந்திய சட்டத்தின் பிரிவு 7 (5)-ஐ பற்றி கையாளும் போது, ரஸ்ஸல் ஆன் ஆர்பிட்ரேஷன் என்ற நூலில் உள்ள பின்வரும் பத்திகள் இந்த நிலைப்பாட்டின் மீது கணிசமான வெளிச்சத்தை வீசுகின்றன. (பார்க்க 23 வது பதிப்பு, பக். 52-55):

"*வேறொரு ஆவணம் பற்றிய குறிப்பு*: ஓர் ஒப்பந்தத்தின் விதிமுறைகள் ஒன்றுக்கும் மேற்பட்ட ஆவணங்களைக் குறிப்பிடுவதன் மூலம் உறுதி செய்து கொள்ள

வேண்டியிருக்கும். எந்த ஆவணங்கள் ஒப்பந்த ஆவணங்களாக அமைகின்றன மற்றும் அவை எந்த முன்னுரிமை வரிசையில் படிக்கப்பட வேண்டும் என்பதைக் கண்டறிவது, பல வணிக நடவடிக்கைகளில், குறிப்பாக கப்பல் போக்குவரத்து மற்றும் கட்டுமான பணிகள் தொடர்பானவற்றில், எதிர்கொள்ளும் ஒரு சிக்கலாகும். வழக்கமான கட்டுமானக் கோட்பாடுகளைப் பயன்படுத்துவதன் மூலமும், ஆதாரங்களின் புறநிலை மதிப்பீட்டின் மூலம் தரப்பினரின் நோக்கங்களை ஊகிக்க முயற்சிப்பதன் மூலமும் இந்தச் சிக்கலானது தீர்மானிக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, கேள்விக்குரிய ஒப்பந்த ஆவணங்கள் முற்றிலும் தனித்தனியானவை என்பதும், ஒன்றின் விதிமுறைகளை மற்றொன்றில் இணைப்பதற்கான எந்த நோக்கமும் நிறுவப்படவில்லை என்பதும் தெளிவாக இருந்தால். இது ஒருங்கிணைப்பு பற்றிய கேள்விகளை பொருத்தமற்றதாக மாற்றக்கூடும். இருப்பினும், செயல்திறன் கடமைகளை வரையறுத்து விதிக்கும் ஒப்பந்த ஆவணம், ஒரு பொதுவர் தீர்ப்புமுறை ஒப்பந்தத்தைக் கொண்ட மற்றொரு ஆவணத்தை இணைப்பதைக் காணலாம். செயல்திறன்

கடமைகளைப் பற்றி ஒரு சர்ச்சை இருந்தால், அந்த மற்ற ஆவணத்தின் பொதுவர் தீர்ப்புமுறை வகையங்களின்படி அந்த சர்ச்சை முடிவு செய்யப்பட வேண்டியிருக்கலாம். முதன்மை ஒப்பந்த ஆவணம் ஒரு பொதுவர் தீர்ப்புமுறை ஒப்பந்தத்தைக் கொண்ட நிலையான வடிவ விதிமுறைகளைக் குறிக்கும்போது இது மிகவும் பொதுவாக நிகழ்கிறது. எவ்வாறாயினும், தரப்பினர்கள் அதை இணைக்க முற்படும் ஒப்பந்தத்திற்கு நிலையான வடிவத்தின் சொற்கள் பொருத்தமானதாக இல்லாமல் இருக்கலாம், அல்லது குறைந்தபட்சம் வேறுபட்ட தரப்பினர்களுக்கு இடையிலான மற்றொரு ஒப்பந்தத்திற்கு குறிப்பு இருக்கலாம். இந்த சூழ்நிலைகளில், பொதுவர் தீர்ப்புமுறை ஒப்பந்தத்தை இணைப்பதாகக் கூறப்படுவது பயனற்றது என்று வாதிட முடியும். 1996 ஆம் ஆண்டு பொதுவர் தீர்வு மற்றும் இசைவுத் தீர்விணக்கச் சட்டத்தின் வரைவாளர்கள், இந்த பிரச்சினையில் குறிப்பிட்ட வழிகாட்டுதலை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர், ஆனால் அவர்கள், குறிப்பு மூலம் சரியான ஒருங்கிணைப்பு இருந்ததா என்பதை நீதிமன்றமே முடிவு செய்யும்படி விடுவதற்கு விரும்பினர். (பத்தி 2.044)

****

நிலையான வடிவ விதிமுறைகளை அமைக்கும் ஒரு ஆவணத்தில் அடங்கியுள்ள ஒரு பொதுவர் தீர்ப்புமுறை ஒப்பந்தத்தை இணைப்பதற்கும், வெவ்வேறு தரப்பினருக்கிடையேயான வேறு சில ஒப்பந்தங்களில் உள்ளதற்கும் இடையிலான வேறுபாட்டை வரைவதற்கு உட்பட்டு, நீதித்துறை சிந்தனை, ஆஃடன் வழக்கில் மாண்புமிகு நீதியரசர் சர் ஜான் மெகாவின் அணுகுமுறைக்கு ஆதரவாக இருப்பதாகத் தெரிகிறது, அதாவது, ஒருங்கிணைப்பின் பொதுவான சொற்கள் போதுமானதாக இல்லை. மாறாக, சிறப்பு சூழ்நிலைகள் இல்லாவிட்டால், 1996 ஆம் ஆண்டு பொதுவர் தீர்வு மற்றும் இசைவுத் தீர்வினைக்கச் சட்டம், பிரிவு 6-க்கு இணங்க, பொதுவர் தீர்வு சட்டக்கூறு குறித்து குறிப்பாக குறிப்பு செய்யப்பட வேண்டும். (பத்தி 2.047)

நிலையான வடிவ விதிமுறைகளுக்கான குறிப்பு:

இணைக்கப்பட கோரும் ஆவணம் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் நிலையான வடிவத் தொகுப்பாக இருக்குமானால், ஒருங்கிணைப்பின் பொதுவான சொற்களே போதுமானதாக இருக்கும் என்பதை நீதிமன்றங்கள்

ஏற்றுக்கொள்ள அதிக வாய்ப்புள்ளது. ஏனென்றால், பொதுவர் தீர்வு சட்டக்கூறு உட்பட அந்த நிலையான விதிமுறைகளை தரப்பினர்கள் நன்கு அறிந்திருப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்."

(பத்தி 2.048)

21. ஒரு பொதுவர் தீர்வு சட்டக்கூறை இணைக்க குறிப்பிட்ட சொற்கள் அவசியம் மற்றும் மற்றொரு ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஒரு துணை ஒப்பந்தத்தில் உள்ள குறிப்பு, துணை ஒப்பந்தத்தில் பொதுவர் தீர்வு சட்டக்கூறை இணைக்க போதுமானதாக இருக்காது என்று *ஆஃடன் /எதிர்/ எம்.எஃப் கென்ட் சர்வீசஸ்*, **[1991] 57 பி.எல்.ஆர். 1** என்ற வழக்கில் மாண்புமிகு நீதியரசர் சர் ஜான் மெகாவ் கூறியுள்ளார்; இந்த கருத்தை, பாரெட் & சன் (பிரிக்வொர்க்) லிமிடெட் /எதிர்/ ஹென்றி பூட் மேனேஜ்மென்ட் லிமிடெட், [1995 CILL 1026] , ட்ரைக் ஹன்சா இன்சூரன்ஸ் கோ. லிமிடெட் /எதிர்/ ஈக்விடாஸ் லிமிடெட், [(1998) 2 Lloyds' Rep 439] மற்றும் எ.ஐ.ஜி. ஐரோப்பா (யு.கே.) லிமிடெட் /எதிர்/ எத்னிகி, [(2000) 2 ஆல். ஈ.ஆர். 566 (சி.எ.)] மற்றும் கடல் வர்த்தக கடல்சார் நிறுவனம் /எதிர்/ ஹெலெனிக் மியூச்சுவல் வார் ரிஸ்க் அசோசியேஷன் (பெர்முடா) லிமிடெட் எண் 2, [2006 EWHC 2530] போன்ற

வழக்குகளும் பின்பற்றியுள்ளன. இவற்றைக் குறிப்பிட்டு, ரஸ்ஸல் பின்வருமாறு முடிகிறார்:

"எனவே தற்போதைய நிலைப்பாடு என்னவென்றால், பொதுவர் தீர்ப்புமுறை ஒப்பந்தம் ஒரு நிலையான வடிவத்திலிருந்து இணைக்கப்பட்டிருந்தால், அந்த விதிமுறைகளுக்கு ஒரு பொதுவான குறிப்பு போதுமானது, ஆனால் குறைந்தபட்சம் கட்டுமானம், மறுகாப்பீட்டு ஒப்பந்தங்கள் மற்றும் சரக்கு பட்டியல்கள் (bills of lading) ஆகியவற்றின் சூழலில் ஒரு நிலையற்ற வடிவ ஒப்பந்தத்தைக் குறிப்பிடும் போது, பொதுவர் தீர்ப்புமுறை ஒப்பந்தத்தைப் பற்றிய ஒரு குறிப்பிட்ட குறிப்பு அவசியமாகிறது."

9. இந்த நீதிமன்றம் சட்டத்தின் பிரிவு 7 (5)-ன் நோக்கத்தையும் விவாதித்து பின்வருமாறு சுருக்கமாகக் கூறியது: (**எம்.ஆர். இன்ஜினியர்ஸ்** வழக்கு, பத்தி 24)

"24. எனவே சட்டத்தின் பிரிவு 7 (5)-ன் செயற்பரப்பு மற்றும் நோக்கத்தை இவ்வாறு சுருக்கமாகக் கூறலாம்:

(i) மற்றொரு ஆவணத்தில் உள்ள ஒரு பொதுவர் தீர்வு சட்டக்கூறு, பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால், குறிப்பு மூலம் ஒரு ஒப்பந்தத்தில் இணைக்கப்படும்:

(1) ஒப்பந்தத்தில், பொதுவர் தீர்வு சட்டக்கூறை கொண்டுள்ள ஆவணங்களைப் பற்றிய தெளிவான குறிப்பு இருக்க வேண்டும்,

(2) மற்ற ஆவணத்திற்கான குறிப்பு, ஒப்பந்தத்தில் பொதுவர் தீர்வு சட்டக்கூறை இணைப்பதற்கான நோக்கத்தை தெளிவாகக் குறிக்க வேண்டும்,

(3) பொதுவர் தீர்வு சட்டக்கூறு பொருத்தமானதாக இருக்க வேண்டும், அதாவது, இது ஒப்பந்தத்தின் கீழ் உள்ள சர்ச்சைகள் தொடர்பாக பயன்படுத்தக்கூடிய திறன் கொண்டது மற்றும் ஒப்பந்தத்தின் எந்தவொரு காலத்திற்கும் முரண்பாடாக இருக்கக்கூடாது.

(ii) தரப்பினர்கள் ஒரு ஒப்பந்தத்தில் நுழையும்போது, மற்றொரு ஒப்பந்தத்திற்கான பொதுவான குறிப்பை உருவாக்கி, அத்தகைய பொதுவான குறிப்பு குறிப்பிடப்பட்ட ஆவணத்திலிருந்து பொதுவர் தீர்வு சட்டக்கூறை தரப்பினர்களுக்கு இடையிலான ஒப்பந்தத்தில் இணைக்கும் விளைவைக் கொண்டிருக்காது. மற்றொரு ஒப்பந்தத்திலிருந்து பொதுவர் தீர்வு சட்டக்கூறானது, பொதுவர் தீர்வு சட்டக்கூறுக்கான ஒரு குறிப்பிட்ட குறிப்பு மூலம் மட்டுமே, ஒப்பந்தத்தில் (அத்தகைய குறிப்பு செய்யப்படும் இடத்தில்) இணைக்கப்படலாம்.

(iii) தரப்பினர்களுக்கு இடையேயான ஒரு ஒப்பந்தம், அந்த ஒப்பந்தத்தின் செயலாக்கம் அல்லது செயல்திறன் மற்றொரு ஒப்பந்தத்தின் (செயல்திறன் தொடர்பான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் பொதுவர் தீர்ப்புமுறை மூலம் சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கான வகையம் ஆகியவற்றைக் கொண்டுள்ளது) அடிப்படையில் இருக்கும் என்று வழங்கும் இடத்தில், பொதுவர் தீர்வு சட்டக்கூறுக்கு சிறப்பு குறிப்பு இல்லாவிட்டால், பின்னர், குறிப்பிடப்பட்ட ஒப்பந்தத்தின் விதிமுறைகள் செயல்படுத்தல்/செயல்திறன் தொடர்பாக மட்டுமே பொருந்துமே தவிர, குறிப்பிடப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ள பொதுவர் தீர்ப்புமுறை ஒப்பந்தம் தொடர்பாக அல்ல.

(iv) ஒரு சுயாதீன வர்த்தகம் அல்லது தொழில்முறை நிறுவனத்தின் (எடுத்துக்காட்டாக ஒரு வர்த்தக சங்கம் அல்லது கட்டிடக் கலைஞர்கள் சங்கத்தின் நிலையான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்) விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் நிலையான வடிவம், அவற்றைக் கட்டுப்படுத்தும் அல்லது ஒப்பந்தத்திற்குப் பொருந்தும் என்று ஒப்பந்தம் வழங்கும் போது, அத்தகைய நிலையான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் உள்ள பொதுவர்

தீர்ப்புமுறைக்கான எந்தவொரு வகையம் உட்பட, அத்தகைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் நிலையான வடிவம், குறிப்பு மூலம் இணைக்கப்பட்டதாகக் கருதப்படும். சில நேரங்களில் ஒப்பந்தம், தரப்பினர்கள் அந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நன்கு அறிந்திருக்கின்றன அல்லது தரப்பினர்கள் கூறப்பட்ட விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் படித்து புரிந்துகொண்டுள்ளன என்றும் கூறலாம்.

(v) தரப்பினர்களுக்கிடையேயான ஒப்பந்தம், ஒப்பந்தத்தின் தரப்பினர்களில் ஒருவரின் ஒப்பந்த நிபந்தனைகள் அவர்களின் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக அமையும் என்று குறிப்பிட்டால் (எடுத்துக்காட்டாக, அரசாங்கம் ஒரு தரப்பினராக இருக்கும்போது அரசாங்கத்தின் ஒப்பந்தத்தின் பொதுவான நிபந்தனைகள்), ஒப்பந்தத்தின் அத்தகைய பொது நிபந்தனைகளின் ஒரு பகுதியாக அமையும் பொதுவர் தீர்வு சட்டக்கூறு தரப்பினர்களுக்கு இடையிலான ஒப்பந்தத்திற்கு பொருந்தும்."

10. தரப்பினர்களின் நோக்கம் முதன்மை ஒப்பந்தத்தை முழுவதுமாக துணை ஒப்பந்தத்தில் இணைப்பது அல்ல என்று இறுதியில் கண்டறியப்பட்டது. மேலும், இந்த நீதிமன்றம், முதன்மை ஒப்பந்தத்தில் உள்ள பொதுவர் தீர்வு

சட்டக்கூறு தரப்பினர்களுக்கு இடையிலான ஒப்பந்தத்திற்கு பொருந்தாது, ஏனெனில், முதன்மை ஒப்பந்தம் கேரள அரசின் பொதுப்பணித் துறைக்கும் ஒப்பந்தக்காரருக்கும் இடையேயானது என்று தீர்ப்பளித்தது, இதில் பொதுவர் தீர்வு சட்டக்கூறு, மூன்று பொதுவர்கள் கொண்ட குழுவை நியமிக்கக் கோரியது, அதில் ஒருவரை கேரள மாநில அரசும், மற்றொருவரை அதிலுள்ள எதிர்மேல்முறையீட்டாளரும் மற்றும் மூன்றாமவரை இந்திய அரசாங்கத்தின் தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் சாலைப் பிரிவின் தலைமை இயக்குநர் நியமிக்க வேண்டும் என்று சட்டக்கூறு கோரியது.

11. இங்கிலாந்து, வேல்ஸ் மற்றும் வடக்கு அயர்லாந்துக்கு நீட்டிக்கப்படும் பொதுவர் சட்டம், 1996 பிரிவு 6 (2) ஆனது, பொதுவர் தீர்வு மற்றும் இசைவுத் தீர்விணக்கச் சட்டம், 1996, பிரிவு 7 (5) உடன் ஒரே கருத்து ரீதியாக (pari materia) ஒத்துப்போகிறது மற்றும் அது பின்வருமாறு கூறுகிறது:-

> "**6. பொதுவர் தீர்ப்புமுறை ஒப்பந்தத்தின் வரையறை.**
>
> ...
>
> (2) ஒரு ஒப்பந்தத்தில் பொதுவர் தீர்வு சட்டக்கூறு எழுத்துப்பூர்வ வடிவம் அல்லது ஒரு பொதுவர் தீர்வு சட்டக்கூறைக் கொண்ட ஒரு ஆவணத்திற்கு குறிப்பு அந்த சட்டக்கூறை ஒப்பந்தத்தின் ஒரு

பகுதியாக மாற்றும் வகையில் இருந்தால் ஒரு நடுவர் ஒப்பந்தத்தை உருவாக்குகிறது."

12. இங்கிலாந்தில் ஒருங்கிணைப்பு பிரச்சினையின் விளக்கத்தைப் புரிந்துகொள்வது பயனுள்ளதாக இருக்கும். ஒருங்கிணைப்பின் பொதுவான சொற்கள் ஒரு பொதுவர் தீர்ப்புமுறை ஒப்பந்தத்தை இணைக்க போதுமானதா என்ற கேள்வி உயர் நீதிமன்றத்தின், குயின்ஸ் அமர்வு, **கடல் வர்த்தக கடல்சார் நிறுவனம் /எதிர்/ ஹெலனிக் மியூச்சுவல் வார் ரிஸ்க்ஸ் அசோசியேஷன் (பெர்முடா) லிமிடெட், தி அதீனா** [2006] EWHC 2530 (Comm) என்ற வழக்கில் வர்த்தக நீதிமன்றத்தின் பரிசீலனைக்காக எழுந்தது. இந்த வழக்கில், ஒற்றை ஒப்பந்த வழக்குக்கும், இரண்டு ஒப்பந்த வழக்கிற்கும் இடையிலான வேறுபாடு அங்கீகரிக்கப்பட்டது. இரண்டு தரப்பினருக்கிடையேயான ஒப்பந்தத்தில் இரண்டாம் நிலை ஆவணத்திற்கான குறிப்பு இருந்தால், அந்த இரண்டாம் நிலை ஆவணம் கேள்விக்குரிய ஒப்பந்தத்தின் தரப்பினரிலிருந்து குறைந்தபட்சம் ஒரு தரப்பினர் வேறுப்பட்ட ஒரு ஒப்பந்தமாக இருந்தால், அது இரண்டு ஒப்பந்த வழக்காக இருக்கும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இரண்டாம் நிலை ஆவணம் மற்ற தரப்பினருக்கு இடையில் இருந்தால் அல்லது சர்ச்சையில் உள்ள ஒப்பந்தத்தின் தரப்பினரில் ஒருவர் மட்டுமே குறிப்பிடப்பட்ட முந்தைய ஒப்பந்தத்திற்கு ஒரு தரப்பினராக இருந்தால், அது இரண்டு ஒப்பந்த

வழக்காக இருக்கும். அத்தகைய ஒப்பந்தத்தில் முந்தைய ஒப்பந்தத்தின் பொதுவான குறிப்பு பொதுவர் தீர்வு சட்டக்கூறை இணைக்க போதுமானதாக இருக்காது. எவ்வாறாயினும், குறிப்பானது ஒரு ஒப்பந்தத்தில் நிலையான விதிமுறைகளை குறித்ததாக இருந்தால், அது 'ஒற்றை ஒப்பந்தம்' என்ற வகையின் கீழ் வரும் மற்றும் ஒரு குறிப்பு மூலம் பொதுவர் தீர்ப்புமுறை ஒப்பந்தத்தை இணைக்க பொதுவான சொற்களைப் பயன்படுத்துவது அனுமதிக்கப்படுகிறது. அந்த வழக்கில் அளிக்கப்பட்ட குறிப்பானது ஒரு ஒற்றை ஒப்பந்த வழக்காக இருந்த ஒப்பந்தத்தின் ஒரு நிலையான வடிவமாக இருந்ததால், நீதிபதி லாங்லி ஒருங்கிணைப்பின் பொதுவான சொற்கள் ஒரு பொதுவர் தீர்வு சட்டக்கூறை இணைக்க போதுமானது என்று கூறினார்.

13. பொதுவான குறிப்பு மூலம் முந்தைய ஒப்பந்தத்தில் உள்ள பொதுவர் தீர்வு சட்டக்கூறை பி ந்தைய ஒப்பந்தத்தில் இணைப்பதற்கான கேள்வி மீண்டும் குயின்ஸ் அமர்வின் முன் **ஹபாஸ் சினாய் வெ திப்பி கஸ்லர் இஸ்திசல் எண்டுஸ்ட்ரி ஏ.எஸ். /எதிர்/ சோமடல் சால்,** [2010] EWHC 29 (Comm) என்ற வழக்கில் பரிசீலனைக்கு வந்தது. மேற்படி வழக்கில் உள்ள ஒப்பந்தம், 10,000 மெட்ரிக் டன் எ◌ுகு ஸ்கிராப் விற்பனை தொடர்பானது. ஒப்பந்தத்தில் பொருள், அளவு, விலை, சரக்கு ஏற்றுதல், சரக்கு இறக்குதல், விகிதம், கட்டணம் செலுத்துதல் மற்றும் இறுதி எடை ஆகிய தலைப்புகளின் கீழ் பல விதிமுறைகள்

இருந்தன. கூறப்பட்ட விதிமுறைகளைத் தவிர, ஒப்பந்தத்தில் பின்வரும் வாசகங்களைக் கொண்ட ஒரு சட்டக்கூறும் இருந்தது: *"மீதமுள்ள அனைத்தும் எங்களின் முந்தைய ஒப்பந்தங்களைப் போலவே இருக்கும்."*

14. அந்த வழக்கில் எழுந்த சர்ச்சை என்னவென்றால், மேலே குறிப்பிட்ட பொதுவான சொற்கள் ஒரு பொதுவர் தீர்வு சட்டக்கூறை இணைக்க முடியுமா என்பதே ஆகும். ஒருபுறம், தரப்பினர்கள், மற்ற தரப்பினருக்கிடையேயான ஒப்பந்தத்தின் விதிமுறைகளையோ அல்லது அவர்களில் ஒருவருக்கும் மூன்றாம் தரப்பினருக்கும் இடையேயான ஒப்பந்த விதிமுறைகளையோ இணைக்கும் வழக்குகளுக்கும், மறுபுறம், நிலையான விதிமுறைகளை இணைக்கும் வழக்குகளுக்கும் இடையேயான அணுகுமுறையில் உள்ள வேறுபாடு கவனிக்கப்பட்டது. தரப்பினர்கள் ஒரு பொதுவர் தீர்வு சட்டக்கூறை இணைக்க முயற்சிக்கும் பின்வரும் பரந்த வகைகள் நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டன, அவை பின்வருமாறு:

> "(1) *A மற்றும் B ஒரு ஒப்பந்தத்தை உருவாக்குகின்றன, அதில் அவர்கள் நிலையான விதிமுறைகளை இணைக்கின்றன.* இவை ஒரு தரப்பினரின் நிலையான விதிமுறைகளாக இருக்கலாம், அவை ஒரு சலுகை கடிதம் அல்லது உத்தரவின் பின்புறத்தில் குறிப்பிடப்பட்டிருக்கலாம் அல்லது குறிப்பிடப்பட்டுள்ள மற்றொரு

ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கலாம்; அல்லது A அல்லது B அல்லது இருவரும் உறுப்பினர்களாக இருக்கும் ஒரு அமைப்பின் விதிகளில் பொதிந்துள்ள விதிமுறைகளாக இருக்கலாம்; அல்லது அவை ஒரு குறிப்பிட்ட வர்த்தகம் அல்லது தொழில்துறையில் உள்ள நிலையான விதிமுறைகளாக இருக்கலாம்.

(2) *A மற்றும் B இருவரும் தரப்பினர்களாக இருந்த வேறொரு ஒப்பந்தம் அல்லது ஒப்பந்தங்களில் அவர்களுக்கு இடையே முன்னர் ஒப்புக் கொள்ளப்பட்ட விதிமுறைகளை உள்ளடக்கிய ஒரு ஒப்பந்தத்தை உருவாக்குகிறார்கள்*

(3) *A மற்றும் B, A (அல்லது B) மற்றும் C-க்கு இடையே ஒப்புக் கொள்ளப்பட்ட விதிமுறைகளை உள்ளடக்கிய ஒரு ஒப்பந்தத்தை உருவாக்குகின்றன.* A ஒரு தரப்பினராக இருக்கும் ஒரு சாசனத்தின் விதிமுறைகளை உள்ளடக்கிய சரக்குப் பட்டியல்; ஒரு அடிப்படை காப்பீட்டின் விதிமுறைகளை உள்ளடக்கிய மறுகாப்பீட்டு ஒப்பந்தங்கள்; காப்பீட்டின் முதன்மை அடுக்கின் விதிமுறைகளை உள்ளடக்கிய அதிகப்படியான காப்பீட்டு ஒப்பந்தங்கள்; மற்றும் ஒரு துணை ஒப்பந்தத்தின் விதிமுறைகளை உள்ளடக்கிய ஒரு முதன்மை ஒப்பந்தம் அல்லது துணை துணை ஒப்பந்தங்களின் விதிமுறைகளை

உள்ளடக்கிய கட்டிடம் அல்லது பொறியியல் துணை ஒப்பந்தங்கள் ஆகியவை பொதுவான உதாரணங்களாகும்.

(4) *A மற்றும் B ஆகியோர், C மற்றும் D-க்கு இடையில் ஒப்புக்கொள்ளப்பட்ட விதிமுறைகளை உள்ளடக்கிய ஒரு ஒப்பந்தத்தை உருவாக்குகின்றன.* சரக்குப் பட்டியல்கள், மறுகாப்பீடு மற்றும் காப்பீட்டு ஒப்பந்தங்கள் மற்றும் கட்டிட ஒப்பந்தங்கள் இந்த வகையின் கீழ் வரலாம்.

15. மேற்சொன்ன **ஹபாஸ்** வழக்கில், மாண்புமிகு நீதியரசர் கிறிஸ்டோபர் கிளார்க், மேற்சொன்ன 'அதீனா' வழக்கின் தீர்ப்பின் அகவுரையை பின்பற்றி, ஒற்றை ஒப்பந்த வழக்குகளில் (வகைகள் 1 மற்றும் 2), ஒப்பந்தத்தின் நிலையான வடிவத்திலிருந்து ஒரு பொதுவர் தீர்வு சட்டக்கூறை இணைப்பதற்கு ஒரு பொதுவான குறிப்பு போதுமானதாக இருக்கும் என்று கூறினார். மேலே குறிப்பிடப்பட்ட 3 மற்றும் 4 பிரிவுகளின் கீழ் வரும் வழக்குகளில், அவை இரண்டு ஒப்பந்த வழக்குகள் என்பதால், முந்தைய ஒப்பந்தத்தில் உள்ள பொதுவர் தீர்வு சட்டக்கூறுக்கு ஒரு குறிப்பிட்ட குறிப்பை வலியுறுத்துவதன் மூலம், ஒரு கடுமையான விதியைப் பின்பற்ற வேண்டும் என்று கூறப்பட்டது. **ஆஃடன் /எதிர்/ எம்.எஃப் கென்ட் சர்வீசஸ், [1991] 31 காண் எல்.ஆர். 60** என்ற வழக்கில் மாண்புமிகு

நீதியரசர் சர் ஜான் மெகாவின் தீர்ப்பின் மீது சார்வுற்று, பின்வரும் விதிமுறைகளில் முறியடிக்கப்பட்டது:

> "53 ஆஃடன் /எதிர்/ கென்ட் மற்றும் தி எத்னிகி ஆகிய வழக்குகளில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் முடிவுகளால் வேறுபட்ட முடிவுக்கு வருவதற்கு நான் கட்டுப்பட்டதாக நான் கருதவில்லை. அந்த இரண்டு வழக்குகளுமே இரண்டு ஒப்பந்த வழக்குகளாக இருந்தன. மேலும், மாண்புமிகு நீதியரசர் சர் ஜான் மெகாவ் மற்றும் மாண்புமிகு நீதியரசர் ரால்ப் கிப்சன் பிரபு ஆகியோரின் தீர்ப்புகள், இரண்டு ஒப்பந்த வழக்குகளில் கூட அவற்றில் எதுவுமே பிணைக்கும் அதிகாரமாக இருக்க முடியாத அளவிற்கு, பகுதி அளவில் முரண்படுகின்றன. மாண்புமிகு நீதியரசர் சர் ஜான் மெகாவின் "*பொதுவர் தீர்வு சட்டக்கூறுகள் தொடர்பாக குறிப்பாக 'சரக்குப் பட்டியல்களில் கப்பல் வாடகை ஒப்பந்தத்தின் பொதுவர் தீர்வு சட்டக்கூறுகளை இணைப்பது தொடர்பாக அதிகாரிகளின் பகுப்பாய்வு*" குறித்த மாண்புமிகு நீதியரசர் எவன்ஸ் எல்.ஜே.யின் உடன்பாடு என்பது தீர்ப்பின் புறவுரையாகும்.''

16. ஒருங்கிணைப்பு தொடர்பான சர்ச்சையை தீர்மானிப்பதாக பொதுவர் தீர்வு சட்டக்கூறின் சுயாதீனமான தன்மை தொடர்பான கருத்து, மேற்கூறிய தீர்ப்பில் பின்வருமாறு கையாளப்பட்டது:

"51 எவ்வாறாயினும், மாண்புமிகு நீதியரசர் லாங்லியைப் போலவே, ஒரு ஒற்றை ஒப்பந்த வழக்கில், பொதுவர் தீர்வு சட்டக்கூறின் சுயாதீனமான தன்மை அது இணைக்கப்பட வேண்டுமா என்பதை தீர்மானிக்க வேண்டும் என்பதை நான் ஏற்கவில்லை. ஒரு வணிக வழக்கறிஞர் ஒரு பொதுவர் தீர்வு சட்டக்கூறு மற்றொரு கணிசமான ஒப்பந்தத்திற்கு ஒரு தனி ஒப்பந்த பிணையம் என்பதையும், "*பொதுவர் தீர்வு சட்டக்கூறு*" என்ற வெளிப்பாடு, அந்த கணக்கில், "*முதன்மை ஒப்பந்தத்திற்கு துணையான நடுவர் ஒப்பந்தத்திற்கு*" ஒரு தவறான பெயராகும் என்பதையும் புரிந்துகொள்வார். ஆனால் ஒரு தொழிலதிபருக்கு பொதுவர் தீர்வு சட்டக்கூறை (அவர் அதை அழைப்பார்) ஒரு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகவும், பொருத்தமான சொற்களால், அத்தகைய ஒப்பந்தத்தின் வேறு எந்த வார்த்தையையும் போலவே இணைக்கும் திறன் கொண்டதாகவும் கருதுவதில் எந்த சிரமமும் இருக்காது; ஒரு தொழிலதிபரின் புரிதலுக்கு நீதிமன்றம் விசாரிக்கப்பட வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஒரு தொழிலதிபர் தனது எதிர்தரப்பினருடன் பல்வேறு தலைப்புகளின் கீழ் 10 குறிப்பிட்ட விதிமுறைகளுடன் ஒரு ஒப்பந்தத்தை ஒப்புக்கொண்டார், பின்னர் அதே தலைப்புகளின் கீழ் அதே எதிர்தரப்பு

விதிமுறைகள் 1-5-உடன் முன்பிருந்ததை போலவே உடன்பட்டார், மீதமுள்ளவற்றைப் பொறுத்தவரை, முந்தைய ஒப்பந்தத்தின் அனைத்து விதிமுறைகளும் பொருந்த வேண்டும் என்று நினைக்கும் ஒருவர், "*அனைத்தும்*" என்பது "*பொதுவர் தீர்வு சட்டக்கூறைத் தவிர அனைத்தும்*" என்று பொருள்படுவதைக் கண்டு ஆச்சரியப்படுவார் என்று நான் நினைக்கிறேன்.

17. ஒற்றை மற்றும் இரண்டு ஒப்பந்த வழக்குகளைப் பற்றிய சிறந்த புரிதலுக்கும், நிலையான வடிவ விதிமுறைகளைப் பற்றிய குறிப்புக்கும், ரஸ்ஸல் ஆன் ஆர்பிட்ரேஷன் 24 வது பதிப்பு (2015) என்ற நூலை ஆராய்வது பொருத்தமானது மற்றும் அவை பின்வருமாறு: (பார்க்க பக்கங்கள் 52-54, 24 வது பதிப்பு.)

"நிலையான வடிவ விதிமுறைகள், ஒற்றை மற்றும் இரண்டு ஒப்பந்த வழக்குகள் பற்றிய குறிப்பு. இணைக்க விரும்பும் ஆவணம் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் நிலையான வடிவமாக இருந்தால், ஒருங்கிணைப்பின் பொதுவான சொற்கள் போதுமானதாக இருக்கும் என்பதை நீதிமன்றங்கள் ஏற்றுக்கொள்ள அதிக வாய்ப்புள்ளது. ஏனென்றால், பொதுவர் தீர்வு சட்டக்கூறு உட்பட அந்த நிலையான விதிமுறைகளை தரப்பினர்கள் நன்கு

அறிந்திருப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம். கடல் வர்த்தக கடல்சார் நிறுவனம் /எதிர்/ ஹெலெனிக் மியூச்சுவல் வார் ரிஸ்க் அசோசியேஷன் (பெர்முடா) லிமிடெட் எண் 2 என்ற வழக்கில், நீதிமன்றம், "இரண்டு ஒப்பந்த வழக்கு" அதாவது பொதுவர் தீர்வு சட்டக்கூறு ஒரு இரண்டாம் நிலை ஆவணத்தில் உள்ள நிலையில், அந்த ஆவணம் கேள்விக்குரிய ஒப்பந்தத்தின் தரப்பினரிலிருந்து குறைந்தபட்சம் ஒரு தரப்பினர் வேறுபட்ட ஒரு ஒப்பந்தமாக இருக்கும் என்பதற்கும், பொதுவர் தீர்வு சட்டக்கூறு மற்றொரு ஆவணத்தில் காணப்படும் நிலையான விதிமுறைகளில் உள்ள "ஒரு ஒற்றை ஒப்பந்த வழக்கு" என்பதற்கும் இடையே ஒரு வேறுபாட்டைக் கண்டறிந்தது. ∴பெடரல் பல்க் கேரிஸ் இன்க் /எதிர்/ சி.இட்டோ & கோ லிமிடெட் ("∴பெடரல் பல்கர்") என்ற வழக்கில் மாண்புமிகு நீதியரசர் பிங்காம் எல்.ஜே.யின் ஆணையை சார்வுற்று, மாண்புமிகு நீதியரசர் லாங்லி கூறியதாவது:

> "கொள்கையளவில், ஆங்கில சட்டம் பொதுவான சொற்களைப் பயன்படுத்துவதன் மூலம் நிலையான சொற்விதிமுறைகளை இணைப்பதை ஏற்றுக்கொள்கிறது, குறிப்பாக விதிமுறைகள் உடனடியாகக் கிடைக்கும்போது, நன்கு அறியப்பட்ட சந்தையில்

நிறுவப்பட்ட வீரர்களுக்கு இடையிலான பரிவர்த்தனைகளின் சூழலில் கேள்வி எழும்போது, இந்த ஏற்பு பொருந்தும் என்று நான் மேலும் கூறுவேன். அந்தக் கோட்பாடு, அந்தத் தீர்ப்புக் குறிப்பு தெளிவுபடுத்துவது போல, ஒரு பொதுவர் தீர்வு சட்டக்கூறாக இருக்கும் ஒரு சொல் மற்றும் பிற சிக்கல்களை நிவர்த்தி செய்யும் ஒரு சொல்லுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை காட்டவில்லை. இதற்கு மாறாக, மற்றும் இது மற்ற தரப்பினர்களை குறிக்கிறது என்ற காரணத்திற்காக, ஒரு "கடுமையான விதி", கப்பல் வாடகை ஒப்பந்தம்/சரக்குப் பட்டியல் வழக்குகளில் பயன்படுத்தப்படுகிறது. இதற்குக் கூறப்படும் காரணம் என்னவென்றால், மற்ற தரப்பினருக்கு சம்பந்தப்பட்ட விதிமுறைகளைப் பற்றிய அறிவோ அல்லது அறிவதற்கான உடனடி வழிமுறையோ இல்லாமல் இருக்கலாம். மேலும், அதிகாரிகள் விளக்குவது போல, ஒரு பொதுவர் தீர்வு சட்டக்கூறின் விதிமுறைகள், வேறுபட்ட ஒப்பந்தத்தின் தரப்பினர்களுக்கு பொருந்தும் வகையில் செய்யப்பட வேண்டுமானால் அவை மாற்றியமைக்கப்பட வேண்டியிருக்கலாம். “

எனவே நீதிமன்றம் நிலையான வடிவ விதிமுறைகளை குறிப்பின் மூலம் இணைப்பதற்கும், ஒரு வேறுபட்ட ஒப்பந்தத்தின் விதிமுறைகளை இணைப்பதற்கும் இடையிலான வேறுபாட்டை மீண்டும் உறுதிப்படுத்தி, ஒரு ஒற்றை ஒப்பந்த வழக்கில் ஒருங்கிணைப்பிற்கான பொதுவான சொற்கள் போதுமானவை என்றும், அதேசமயம், இரண்டாம் நிலை ஆவணம் ஒரு பொதுவர் தீர்ப்புமுறை ஒப்பந்தத்தைக் கொண்ட நிலையான வடிவ விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்டதாகக் கூறப்படாவிட்டால், அதன் இயல்பால் இரண்டு ஒப்பந்த வழக்குக்கு மற்ற ஒப்பந்தத்திற்கு குறிப்பிட்ட குறிப்பு தேவைப்படலாம் என்றும் நீதிமன்றம் முடிவு செய்தது. அந்த வழக்கில், பொதுவர் தீர்வு சட்டக்கூறுக்கு குறிப்பிட்ட குறிப்பு தேவையில்லை. கீழே விவாதிக்கப்பட்டபடி, இந்த அணுகுமுறை அடுத்தடுத்த சந்தர்ப்பங்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது, இருப்பினும், இது ஒரே தரப்பினர்களுக்கு இடையேயான தனி ஒப்பந்தத்தின் விதிமுறைகளை - தரமானதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் - ஒருங்கிணைக்கும் வழக்குகளுக்கும் — அவை உண்மையில் ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தமாக இருந்தாலும், "ஒற்றை ஒப்பந்தம்"

என கருதப்படும் – மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேறுபட்ட தரப்பினர்களுக்கு இடையேயான ஒப்பந்தத்தில் உள்ள விதிமுறைகளை ஒருங்கிணைக்கும் வழக்குகளுக்கும் – அவை "இரண்டு ஒப்பந்த" வழக்குகள் என கருதப்படும் – இடையே ஒரு சிறிய ஆனால் "முக்கியமான" வேறுபாட்டை வரைகிறது. (பத்தி 2-049)

<u>ஒற்றை ஒப்பந்த வழக்குகளின் நீட்டிப்பு.</u>

சமீபத்தில், நீதிமன்றங்கள் பொதுவர் தீர்வு சட்டக்கூறை ஒருங்கிணைப்பதற்கு பொதுவான சொற்களே போதுமானதாக இருக்கும் நிலையான வடிவ ஒப்பந்தங்களுக்கு பொருந்தக்கூடிய "ஒற்றை ஒப்பந்தம்" என்ற கொள்கையை, அதே தர்க்கம் பொருந்தும் என்று கூறக்கூடிய பிற வகை ஒப்பந்தங்களுக்கும் நீட்டித்துள்ளதாகத் தெரிகிறது. எனவே, ஒருங்கிணைக்க விரும்பும் ஆவணம் அதே தரப்பினருக்கு இடையிலான ஒரு தனிப்பயன் ஒப்பந்தமாக (bespoke contract) இருந்தால், மற்ற ஒப்பந்தம் நிலையான விதிமுறைகளில் இல்லாவிட்டாலும் மற்றும் முற்றிலும் தனி ஒப்பந்தமாக இருந்தாலும் கூட, நீதிமன்றங்கள் இதை ஒரு "ஒற்றை ஒப்பந்தம்" வழக்காக ஏற்றுக்கொண்டன, அங்கு ஒருங்கிணைப்பின் பொதுவான சொற்கள் போதுமானதாக இருக்கும். இந்த அணுகுமுறையின் தர்க்கம்

> என்னவென்றால், ஒருங்கிணைக்கப்பட வேண்டியதாகக் கூறப்படும் விதிமுறைகளின் அடிப்படையில் தரப்பினர்கள் ஏற்கனவே ஒப்பந்தம் செய்துள்ளனர், எனவே ஒரு நிலையான விதிமுறையை ஒருங்கிணைப்பதை எதிர்க்கும் தரப்பினரை விட, அவர்கள் நம்பியிருக்கும் விதிமுறையைப் பற்றி நன்கு அறிந்திருக்க அதிக வாய்ப்புள்ளது. வேறு விதமாக கூறினால், பிந்தையவற்றிற்கு ஒருங்கிணைப்பின் பொதுவான சொற்கள் போதுமானதாக இருந்தால், அவை முந்தையவற்றிற்கு இன்னும் அதிகமாக இருக்க வேண்டும். குறிப்பிடப்பட்ட ஒப்பந்தம் அசல் ஒப்பந்தத்தின் ஒரு தரப்பினருக்கும் மூன்றாம் தரப்பினருக்கும் இடையே இருந்தாலும், அந்த ஒப்பந்தங்கள் ஒட்டுமொத்தமாக "ஒரு வணிக உறவின் பின்னணியில் மேற்கொள்ளப்பட்டால்", அத்தகைய சூழ்நிலையையும் ஒரு "ஒற்றை ஒப்பந்த" வழக்காக ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. (பத்தி 2-050)
>
> [வலியுறுத்தப்பட்டது]

18. மேலே விரிவாக விவாதிக்கப்பட்ட **எம்.ஆர். இன்ஜினியர்ஸ்** வழக்கில், இந்த நீதிமன்றம், முந்தைய ஒப்பந்தத்தில் ஒரு பொதுவர் தீர்வு சட்டக்கூறை ஒரு பொதுவான குறிப்பால் இணைக்க முடியாது என்ற விதியை நிலைநிறுத்தியது.

விதிக்கு விதிவிலக்கு என்பது ஒரு வர்த்தக சங்கம் அல்லது ஒரு தொழில்முறை நிறுவனத்தால் ஒப்பந்தத்தின் நிலையான வடிவத்திற்கான குறிப்பு ஆகும், இந்த விஷயத்தில் ஒரு பொதுவர் தீர்வு சட்டக்கூறை இணைப்பதற்கு ஒரு பொதுவான குறிப்பு போதுமானதாக இருக்கும். ரஸ்ஸல் ஆன் ஆர்பிட்ரேஷன், 23 வது பதிப்பு (2007) என்ற புத்தகத்தின் மீது இந்த நீதிமன்றம் சார்வுற்றது. **எம்.ஆர். இன்ஜினியர்ஸ்** வழக்கில் தீர்ப்புக்குப் பிறகு ஒருங்கிணைப்பு தொடர்பான சட்டத்தை உருவாக்குவது கவனமாக பரிசீலிக்கப்பட வேண்டும். **ஹபாஸ் சினாய் வெ திப்பி கஸ்லர் இஸ்திசல் எண்டுஸ்ட்ரி ஏ.எஸ். /எதிர்/ சோமடல் சால்,** [2010] EWHC 29 (Comm) என்ற வழக்கில், ஒரு தரப்பினரின் நிலையான வடிவமும் 'ஒற்றை ஒப்பந்த' வழக்காக அங்கீகரிக்கப்படும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. மேற்கண்ட வழக்கில், ஒப்பந்தத்தின் நிலையான வடிவத்திலிருந்து ஒரு பொதுவர் தீர்வு சட்டக்கூறை இணைப்பதற்கு ஒற்றை ஒப்பந்த வழக்குகளில் பொதுவான குறிப்பு போதுமானது என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. ஒருபுறம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக சங்கங்கள் அல்லது தொழில்முறை நிறுவனங்களின் நிலையான வடிவங்களுக்கும், மறுபுறம் ஒரு தரப்பினரின் நிலையான விதிமுறைகளுக்கும் இடையில் எந்த வேறுபாடும் வரையறுக்கப்படவில்லை. ரஸ்ஸல் ஆன் ஆர்பிட்ரேஷன் 24 வது பதிப்பு (2015) **ஹபாஸ்** வழக்கையும் கவனத்தில் கொள்கிறது.

19. ஒரு முந்தைய ஒப்பந்தத்தைக் குறித்த பொதுவான குறிப்பு, பிந்தைய ஒப்பந்தத்தில் பொதுவர் தீர்ப்புச் சட்டக்கூறை உள்ளடக்க போதுமானதாக இல்லாவிட்டாலும், நிலையான வடிவத்தைக் குறித்த பொதுவான குறிப்பு, பொதுவர் தீர்ப்புச் சட்டக்கூறை உள்ளடக்க போதுமானதாகும் என்று நாங்கள் கருதுகிறோம். **எம்.ஆர். இன்ஜினியர்ஸ்** வழக்கில், இந்த நீதிமன்றம் வர்த்தக சங்கங்கள் மற்றும் தொழில்முறை நிறுவனங்களின் ஒப்பந்தத்தின் நிலையான வடிவத்தின் விதிவிலக்குகளைக் கட்டுப்படுத்தியது. **எம்.ஆர். இன்ஜினியர்ஸ்** வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பிற்குப் பிறகு சட்டத்தின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, பொதுவர் தீர்ப்புச் சட்டக்கூறை இணைப்பதற்கு ஒருமித்த நிலையான வடிவத்தைப் பற்றிய பொதுவான குறிப்பு போதுமானது என்று நாங்கள் கருதுகிறோம். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒரு தரப்பினரின் ஒப்பந்தத்தின் நிலையான வடிவத்தைப் பற்றிய பொதுவான குறிப்பு, பொதுவர் தீர்ப்புச் சட்டக்கூறை இணைக்க போதுமானதாக இருக்கும். **எம்.ஆர். இன்ஜினியர்ஸ்** வழக்கில் இந்த நீதிமன்றம் சார்வுற்ற முந்தைய பதிப்போடு சேர்த்துப் படித்து, ரஸ்ஸல் ஆன் ஆர்பிட்ரேஷன் 24 வது பதிப்பு (2015)-ன் பத்தியை ஆய்வு செய்வது, ஒருங்கிணைப்பு தொடர்புடைய சட்டத்தின் நிலைப்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை நிரூபிக்கும். ஒரு தரப்பினரின் ஒப்பந்தத்தின் நிலையான வடிவம் தொடர்பான ஒரு பொதுவான குறிப்பு,

வர்த்தக சங்கங்கள் மற்றும் தொழில்முறை அமைப்புகளின் ஒப்பந்தங்களுடன் இணைந்து பொதுவர் தீர்ப்புச் சட்டக்கூறை இணைப்பதற்கு போதுமானதாக இருக்கும் என்ற திருத்தத்துடன் **எம்.ஆர். இன்ஜினியர்ஸ்** வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்புடன் நாங்கள் உடன்படுகிறோம்.

20. தற்போதைய வழக்கில், மேல்முறையீட்டாளரால் கொள்முதல் ஆணை வழங்கப்பட்டது, அதில் விநியோகமானது அதில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின்படி மற்றும் இணைக்கப்பட்ட நிலையான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி வழங்கல் இருக்கும் என்று திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளது. விநியோக காலத்தைத் தவிர, கொள்முதல் ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதை எதிர்மேல்முறையீட்டாளர் 15.12.2012 தேதியிட்ட தனது கடிதத்தின் மூலம் உறுதிப்படுத்தினார். பொருட்கள் விநியோகிக்கப்பட்ட பிறகு, சர்ச்சை எழுந்தது. சந்தேகத்திற்கு இடமின்றி, கொள்முதல் ஆணையுடன் இணைக்கப்பட்ட நிலையான வடிவம் ஒரு வர்த்தக சங்கம் அல்லது ஒரு தொழில்முறை அமைப்பைச் சேர்ந்தது என்று தரப்பினரால் செய்யப்பட்ட வேண்டுகோள்கள் அல்லது சமர்ப்பிப்புகளிலிருந்து எதுவும் வெளிப்படவில்லை. இருப்பினும், கொள்முதல் ஆணையுடன் இணைக்கப்பட்ட நிலையான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து எதிர்மேல்முறையீட்டாளர்

அறிந்திருந்தார். கொள்முதல் ஆணை என்பது ஒரு ஒற்றை ஒப்பந்தமாகும் மற்றும் அது ஒரு வர்த்தக சங்கம் அல்லது ஒரு தொழில்முறை அமைப்பால் வழங்கப்படாவிட்டாலும் கூட, அந்த நிலையான வடிவத்தின் பொதுவான குறிப்பு பொதுவர் தீர்ப்புச் சட்டக்கூறை உள்ளடக்க போதுமானதாகும்.

21. மேற்கூறிய காரணங்களுக்காக, மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது மற்றும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ரத்து செய்யப்படுகிறது. இருதரப்பினருக்கும் இடையிலான தகராறை தீர்ப்பளிக்க நீதிபதி சுஷில் ஹர்கௌலி பொதுவராக நியமிக்கப்படுகிறார்.

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்து கொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை

நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."